## தமிழ்நாட்டின் அறிவுச் சொத்துகள்!

மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கும், துறை சார்ந்த மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என, தான் சென்று வந்த அனுபவத்தை முகநூலில் பகிர்ந்துள்ளார் எழுத்தாளர் முகில். “மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் மிகச்சிறப்பாகக் கட்டப்பட்டுள்ளது. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களும், துறைசார்ந்த மாணவர்களும் படையெடுக்கிறார்கள். முற்றிலும் குளிரூட்டப்பட்ட அரங்குகள், நல்ல இருக்கைகள், குடிநீர், தூய்மையான கழிவறைகள் என்று வசதிகள் சிறப்பாக இருக்கின்றன. புத்தகங்களைத் தேடும் வசதியும் அருமையாக இருக்கிறது.

நான் எல்லா தளத்துக்கும் செல்லவில்லை. குழந்தைகள் நூல்கள் இருக்கும் பகுதிக்கும் செல்ல நேரமில்லை. வரலாறு மற்றும் தமிழ் நூல்கள் இருக்கும் தளங்களில் நிதானமாக வலம் வந்தேன். தமிழில் நிறைய நல்ல புத்தகங்கள் இருக்கின்றன. வருங்காலத்தில் இன்னும் பல அரிய, முக்கியமான, புதிய நூல்களும் இடம்பெறும் என்று நம்புகிறேன். ஆங்கில நூல்களில் வரலாறு பிரிவு எனக்குச் சற்றே ஏமாற்றமளித்தது. வருங்காலத்தில் வரிசைகள் நிரம்பலாம்.

எனது இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்கள் அங்கே இடம்பிடித்திருக்கின்றன என்று கணினித் திரையில் தேடித் தெரிந்துகொண்டேன். கண்ணில்பட்ட சில நூல்களை, நண்பர்களின் நூல்களை மட்டும் படம் பிடித்தேன்.

நல்ல அனுபவம். இன்னும் ஓரிரு வருடங்கள் கழித்து, மீண்டும் சென்று பார்க்க வேண்டும்” என்று பதிவிட்டுள்ளார்.

அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகமும் கலைஞர் நூற்றாண்டு நூலகமும் தமிழ்நாட்டின் அறிவுச் சொத்து என்பதை எழுத்தாளர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## ஃப்ளாஷ்பேக்



மு.குணசேகரன்



### அண்ணா அறிவாலயம் கட்ட நிதி!

1987-ஆம் வருடம், எனது தந்தை முருகேசன், கோவை மாவட்டம், காரமடையில் இயங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச) செயலாளராக இருந்தார். அப்போது, அண்ணா அறிவாலயம் கட்ட தொழிற்சங்க உறுப்பினர்கள் அனைவரின் ஒரு நாள் சம்பளத்தை நிதியாக ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரத்தை, தலைவர் கலைஞர் அவர்களிடம் கொடுத்தபோது எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– மு.குணசேகரன், மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி, கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஒளிநிலையை உண்டாக்கும் கொடி!

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 19-ஆம் தேதி, தி.மு.கழகக் கொடி பற்றிய விளக்கம் கழக ஏடான ‘மாலைமணி’ ஏட்டில் வெளிவந்தது.

கருப்பு : அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்விலுள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியாகும்.

சிவப்பு : அம்மூன்று துறையிலும் உள்ள இருண்ட நிலையைப் போக்கி, ஒளி நிலையை உண்டாக்கவேண்டும் என்பதைக் காட்டும் அறிகுறியாகும்.

இருண்ட நிலையை ஒளிநிலை அழித்துக்கொண்டு வர வேண்டும். ‘இருண்ட வானின் அடியில் தோன்றி எழும்பும் இளம்பரிதி ஒளிபோல’ கருப்பு மேலேயும் சிவப்பு கீழேயும் வைக்கப்பட்டுள்ளன.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 29

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

● பாபு மங்குராம்



## மனுஸ்மிருதியைத் தடை செய்! - பாபு மங்குராம்

*1921-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட ஒருங்கிணைந்த பஞ்சாப் மாகாணத்தில், இந்து (31.%), சீக்கியம் (12.4%), முஸ்லிம் (52.4%) ஆகிய மூன்று மதங்களைச் சேர்ந்தவர்களும் குறிப்பிடத்தகுந்த அளவில் இருந்தனர். அவற்றில் முஸ்லிம், சீக்கியம் ஆகிய இரு மதங்களின் தத்துவங்களும் சாதியை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும், பஞ்சாபில் பல்வேறு சாதிகளும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும் இருந்தன. இன்றும் இருக்கின்றன.*

*1909-இல் மிண்டோ-மார்லி சட்டத்தின்படி முஸ்லிம்களும், 1919-இல் மாண்டேகு- செம்ஸ்போர்டு சட்டத்தின்படி சீக்கியர்களும் இட ஒதுக்கீடு பெற்றதைத் தொடர்ந்து, ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் தனி இடஒதுக்கீடு கோரினர். தீண்டப்படாதவர்கள் (Untouchables) என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் (Depressed Class) என்றும் அழைக்கப்பட்ட பட்டியல் சாதி மக்கள் (Scheduled Castes) இந்து, சீக்கியம், முஸ்லிம் ஆகிய மூன்று மதங்களிலும் இருந்தனர்.*

*மூன்று மதங்களிலும் இணையாமல் புது அடையாளத்தின் கீழ் இணைந்து, தனிப்பிரதிநிதித்துவம் பெற முயன்றனர். அத்தகைய நோக்கத்துடன் உருவான அமைப்புகளில் முக்கியமானது ஆதி-தர்மி (Ad-Dharmi movement) இயக்கம்.* ***ஆதி தர்மம்*** *என்றால், உண்மையான அல்லது* ***பண்டைய மதம்*** *என்று பொருள்.*

*ஆதிதர்மி இயக்கம் 13-ஆம் நூற்றாண்டின் பக்தி இயக்கத் துறவியான ரவிதாசரை ஆன்மீக குருவாக ஏற்றுக்கொண்டு, 1925-இல் பாபு மங்குராம் முகோவாலியா என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. சமார் சமூகத்தைச் சேர்ந்த பாபு மங்குராம் பஞ்சாபின் ஹோஷியார்பூர் மாவட்டத்தில் உள்ள முகோவால் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். தோல் வணிகத்தில் ஈடுபட்ட குடும்பத்தைச் சேர்ந்த, ஒப்பீட்டளவில் பொருளாதாரத்தில் வசதியானவராக இருந்தபோதிலும், அவர் அண்ணல் அம்பேத்கர் போன்று பள்ளியில் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளானார்.*

*அதன்விளைவாக, பள்ளிப்படிப்பைத் தொடர முடியாமல் நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1909-இல் அமெரிக்கா சென்ற மங்குராம் பல தொழிற்சாலைகளில் வேலை செய்தார். மங்குராம் சமத்துவம், சுதந்திரம் குறித்த கருத்துக்களை, அமெரிக்காவின் ஜனநாயக, தாராளவாத விழுமியங்களிலிருந்து கற்றுக்கொண்டார்.*

### ஆயுதமேந்திய கிளர்ச்சி

*பல ஆண்டுகள் அமெரிக்காவில் வேலை செய்த பாபு மங்குராம் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான ஆயுதமேந்திய கிளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு இயங்கிய காதர் அமைப்பில் இணைந்து ஆயுதங்களைக் கப்பலில் இந்தியாவிற்கு அனுப்ப முயன்றார். ஆயுதங்களை இந்தியாவிற்குக் கொண்டு வந்த கப்பல் பிடிபட்டதால், மங்குராம் பிலிப்பைன்ஸில் சில காலம் தலைமறைவாக வாழ்ந்தார்.*

*பின்னர் 1925-இல் அங்கிருந்து இலங்கை, மதுரை, சென்னை வழியாக டெல்லி திரும்புகையில், மதுரை மீனாட்சிக் கோயிலுக்குச் சென்ற பாபு மங்குராமிடம், தீண்டப்படாதவர்களைத் தொடாமல் கவனமாக இருக்குமாறு அங்குள்ளவர்கள் கூறியுள்ளனர், அவர் அணிந்திருந்த ஆடையைக் கண்டு உயர்சாதியைச் சேர்ந்தவர் என்று அவர்கள் கருதியுள்ளனர்.*

*16 வருடங்கள் வெளிநாட்டில் வசித்து, தனது சொந்த கிராமத்திற்குத் திரும்பிய மங்குராம், அங்கு இன்னும் தீண்டாமைப் பழக்கம் தடையின்றித் தொடர்ந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். “வெளிநாட்டில் வசிக்கும் போது, பிறப்பு சார்ந்த சாதிய அடிப்படையிலான உயர்வுதாழ்வு என்ற படிநிலையையும், தீண்டாமைக் கொடுமையையும் மறந்திருந்தேன், இதே மனநிலையுடன் 1925-ஆம் ஆண்டு டிசம்பரில் சொந்த மண்ணுக்குத் திரும்பினேன். தீண்டாமை நோயிலிருந்து இதுவரை தப்பித்த என்னை, மீண்டும் அந்த நோய் துன்புறுத்தத் தொடங்கியது. இந்த நோயைத் தீர்க்கும்வரை இந்துஸ்தானுக்கு (இந்தியாவிற்கு) விடுதலை கிடைக்காது” என்று பின்னாளில் குறிப்பிட்டார் பாபு மங்குராம்.*

*இருப்பினும், மனம் தளராத பாபு மங்குராம் வாழ்நாள் முழுவதையும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றத்திற்கு அர்ப்பணிக்க முடிவு செய்தார், தீண்டப்படாதவர்களுக்காக தனது சொந்த கிராமத்தில் ஒரு தொடக்கப் பள்ளியை நிறுவினார். சாதிய அடக்குமுறைக்கு எதிரான அவரது முயற்சிகளை உயர் சாதியினர் கடுமையாக எதிர்த்தனர். அவற்றையும் மீறி, பாபு மங்குராம் தொடங்கிய ஆதிதர்மி இயக்கம் பஞ்சாபில் தீண்டப்படாத மக்கள் மத்தியில் வெகுவேகமாக வளர்ந்து பரவியது.*

**ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைகளாக்கி, அவர்களின் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் மனுஸ்மிருதி போன்றவற்றைத் தடை செய்ய வேண்டும்!**

*1926-ஆம் ஆண்டு ஜூன் 11-12 அன்று முகோவாலியா கிராமத்தில் நடைபெற்ற ஆதிதர்மி இயக்க மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில், “ஆதிதர்மிக்களாகிய நாங்கள் இந்துக்கள் அல்ல. எங்களை இந்துவாகக் கணக்கிட வேண்டாம், இந்து மதத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை, ஆதிதர்மி இயக்கத்தினரை ‘ஆதிதர்மி’ என்ற பெயரில் தனி மதத்தினராக மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் குறிப்பிட வேண்டும், மக்களைப் பாகுபடுத்தும் சாதி அமைப்பை ஏற்றுக்கொள்ள மாட்டோம்,*

*தீண்டாமையை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும், அதற்காக அவர்களுக்குப் பள்ளிகளில் கட்டணச்சலுகை, உதவித்தொகை தர வேண்டும், நகராட்சி, மாவட்ட கவுன்சில்கள், சட்டமன்றம் ஆகியவற்றில் ஒடுக்கப்பட்ட மக்களின் மக்கள்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் வேண்டும், ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைகளாக்கி, அவர்களின் சமூக முன்னேற்றத் திற்குத் தடையாக இருக்கும்* ***மனுஸ்மிருதி*** *போன்றவற்றைத் தடை செய்ய வேண்டும்” உள்ளிட்டவை முக்கியமானவை.*

*ஆதிதர்மி இயக்கம் சைமன் கமிஷனைப் புறக்கணிக்க மறுத்தது. 1928-ஆம் ஆண்டு நவம்பரில் பாபு மங்குராம் தன் தலைமையில் பிரமாண்ட பேரணி நடத்தி தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை சைமன் கமிஷனிடம் வழங்கினார். ஆதிதர்மி இயக்கத்தின் கோரிக்கைக்கு ஏற்ப, 1931-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் ஆதிதர்மி மதத்தின் கீழ் கணக்கெடுக்கப்பட்டனர்.*

*அதன்படி, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மொத்தம் 4 லட்சத்து 18 ஆயிரத்து 789 நபர்கள் தங்களை ஆதிதர்மிகளாக அறிவித்துக் கொண்டனர். இந்த எண்ணிக்கை பஞ்சாப் மாகாணத்தின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் சுமார் 1.5%, தலித் மக்களின் மக்கள்தொகையில் 10%. குறுகிய கால கட்டத்தில் ஆதிதர்மி இயக்கம் பெற்ற வரவேற்பை இது சுட்டிக்காட்டுகிறது.*

*1929-இல் கீர்த்தி கிசான் கட்சியின் மாத இதழில் ‘வித்ரோஹி’ என்ற புனைப்பெயரில் எழுதிய பகத்சிங், சாதியக் கொடுமைக்கு எதிரான ஆதிதர்மி இயக்கத்தின் தனிமதம், மக்கள்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் ஆகிய கோரிக்கைகளை ஆதரித்தார். அதே வேளையில், ஆங்கிலேயர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு ஆதிதர்மி இயக்கத்தினரை எச்சரித்தார்.*

*1930-களில் லண்டனில் நடந்த வட்டமேசை மாநாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனி வாக்காளர் தொகுதி கோரிய அண்ணல் அம்பேத்கருக்கு மங்குராம் ஆதரவளித்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடிய அண்ணல் அம்பேத்கருக்கும் மகாத்மா காந்திக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், அண்ணல் அம்பேத்கருக்கு ஆதரவாக வெகுமக்களிடம் பரப்புரை செய்தார், அவரை ஆதரித்து பல்வேறு தந்திகளை அனுப்பினார். மகாத்மா காந்தியை நிராகரித்து, அண்ணல் அம்பேத்கரை ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அறிவித்தார்.*

*இரட்டை வாக்குடன் கூடிய தனித்தொகுதிகளை வட்டமேசை மாநாட்டில் வென்றெடுத்த அண்ணல் அம்பேத்கருக்கு எதிராக மகாத்மா காந்தி தொடங்கிய உண்ணாவிரதத்தை ‘ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறிக்கும் முயற்சி’ என்று விமர்சித்தார். காந்தியின் உண்ணாவிரதத்தைக் கண்டித்து, பாபு மங்குராம் 20 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார். பஞ்சாபில் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து உழைத்த பாபு மங்குராம் 94-வது வயதில் 1980-இல் மறைந்தார்.*

**...குரல் ஒலிக்கும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

604

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131